[20th March 1961

six annas per acre except one factory (Pon Allom) which pays land tax at Rs. 190 per acre annually. In addition to this levy, the licensees have to pay a sum of Rs. 30 per acre annually being the commuted money rent, in lieu of the payment of a stipulated quantity of Salt to Government by the parties, as per the Travancore-Cochin Government's orders.

The Proprietors of the Palkulam Salt Factory which is on Government land have to pay 10 per cent of the net profits in addition to the annual payment of Rs. 30 per acre.

The Proprietor of a Salt Factory (C. N. Allom) on private land has to pay 10 per cent of the net profits to Government.

(*c*) & (*d*) No tax is being collected from the Salt factories in this State.

The taram assessment if the land had already been assessed at settlement, or a lease amount fixed with reference to the local conditions or settled by open auction is charged on Government lands assigned or leased out for salt manufacture.

Weekly holiday for workers

* 939 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the categories of workers who are not entitled for a weekly holiday as per G.O. Ms. No. 2565, Public Health, dated 11th August 1959; and

(*b*) the reason therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) and (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR: ஸார், இந்த வேலையாட்களுக்கு வாராந்தா விடுமுறை பற்றி ஒரு சில கேட்டிகரிகளுக்கு மாத்திரம் கொடுக்க சௌகரியம் இல்லை, அல்லது அப்படிக் கொடுக்க வேண்டி வந்தால், அதிகமாக ஆட்கள் தேவை இருக்கிறது என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இவை ஹைலி டெக்னிகல் வேலைகள் இல்லை, ஆட்கள் கிடைப்பது கஷ்டம் இல்லை. அதிக ஆட்களை எடுத்து இவர்களுக்கு விடுமுறை கொடுக்க ஏன் சர்க்கார் ஏற்பாடு செய்யக் கூடாது? அம்மாதிரியே தான் உறுதிமொழிக் கமிட்டிக்கும் சொல்லப்பட்டது. ஏன் ஆட்கள் அதிகம் எடுக்கப்படவில்லை, எப்பொழுது எடுக்கப்படுவார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU: சமீபகாலத்தில் தான் நர்ஸிங் ஸ்டாபுக்கு ஹாலிடேஸ் கொடுத்திருக்கிறோம். இதனால் பல லட்சக் கணக்கான பணம் செலவாகிறது. இப்பொழுது சொல்லுகிற இந்த சிப்பந்திகளுக்கு லீவ் ரிசர்வ் பண்ணவேண்டும் என்றால் அது அவ்வளவு சுலபமாகப் பண்ண முடியாது. கூடுமானவரையில், இவர்களுக்கும் வீக்லி புல் டே அல்லது ஹாப் டே எவ்வப்பொழுது சாத்தியமோ அவ்வப் போது கொடுக்கிறோம்.

---

a Printed as Appendix II on page 182 infra.

20th March 1961]

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த வேலையாட்களைப் பொறுத்த மட்டில், எற்கனவே இருக்கும் ஆட்களுக்கு 8 மணி நேரம் வேலைக்கும் பிறகு வாராந்தர விடுமுறை அவசியம் என்று உணர்ந்து, அதிக ஆட்கள் வேண்டுமானாலும், சில லட்ச ரூபாய்கள் செலவானாலும், பே கமிஷன் சிபாரிசுகளால் எவ்வளவோ செலவுசெய்யும் சர்க்கார் இதையும் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு ஒரு கால வரம்பு வைத்து, படிப் படியாக ஆட்கள் எடுத்து வாராந்தர விடுமுறை கொடுக்க ஏற்பாடு செய் வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நர்ஸிங் ஸ்டாபுக்கே எல்லோருக்கும் இப்பொழுது கொடுக்கவில்லை. ஸிடியில், மற்றும் டீசிங் ஹாஸ்பிடல் உள்ள மொபசல்களிலும் கொடுக்கப் படுகிறது. பிற்பாடுதான் மற்ற ஹாஸ்பிடல்களில் அம்மாதிரிக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இவர்களுக்கு வாராந்தர விடுமுறை பற்றி கவனிக்க வேண்டும்.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த அறிக்கையில் அதிகமான ஆட்கள் வேண்டியிருப்பதால் ஹாலிடேஸ் கொடுக்கவில்லை என்றிருக் கிறது. இந்த 21 கேட்டிகரிகளில் எவ்வளவு ஆட்கள் வேலை செய்கிறார் கள் ? புள்ளி விவரங்கள் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது கொடுக்க சாத்திய மில்லை.

Cyclone relief (Vedaranyam Block)

* 941 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1955-ம் வருடம் வீசிய புயல் நிவாரணத்திற்காக வேதாரண்யம் பிளாக்கில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன ?

(இ) அவைகளில் எத்தனை வீடுகள், எங்கெங்கே சமீபத்தில் பெய்த மழையினால் வீழ்ந்துவிட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Two hundred and sixty-six houses were constructed in Vedaranyam block under the cyclone relief housing scheme of 1955;

(*b*) Thirty-one houses collapsed due to recent rains in the following places in Vedaranyam block :—

Maharajapuram colony	26
Agasthiampalli colony	2
Thethagudi southern colony	1
Pushpavanam colony	2
Total ...	31

SRI A. VEDARATHNAM : ஸார், இந்தக் கட்டிடங்கள் திறந்து நான்கு மாதங்களுக்குள்ளாகவே சர்க்கார் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்கள் படி இத்தனை வீடுகள் விழுந்து இருக்கின்றன. ஆனால் உண்மையிலேயே 80 வீடுகள் கட்டிய காலனியில், 50 வீடுகளுக்கு மேல் விழுந்து இருக் கின்றன. சரியாகக் கணக்கு எடுக்கவில்லை. இப்படி நாலு மாதங்களுக்குள் விழுந்து விடக்கூடிய கட்டிடங்களைக் கட்டியதற்குப் பொறுப்பாளி யார் ? அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அவர்களிடம் எக்ஸ்ப்ளநேஷன் வாங்கப்பட்டதா ?

THE HON. SRI P. KAKKAN : சமீபத்தில் ஏற்பட்ட பெருமழை காரணமாக இந்த வீடுகளில் சில விழுந்து இருக்கின்றன. யார் பொறுப்பு, அதிகாரிகளா அல்லது மக்களா என்று கவனிக்க வேண்டியதில் கனம்